முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1307

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.04.2023, வெள்ளிக்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
ஞானச்சுடரே தேசிகா வாழ்க
தானதர்மத்தின் சக்தியே வாழ்க
தவமெல்லாம் சித்தியாக மக்களுக்கு அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே குருராஜனே வாழ்கவாழ்க
அருளியே சுப்ரமணியப்பெருமான் யானும்
அவனியில் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 15 ம் நாள், 28.04.2023, வெள்ளிக்கிழமை)
அரங்கனுக்கு இன்னும் சக்திகூட எடுத்துரைப்பேன்
3. உரைக்கவே சோபகிருது தகர்திங்கள்
உயர்வாக அரங்கனுக்கு இன்னும் ஆற்றல்பெருகி
அபயமென இன்னும் பல ஞானியர் கூட்டம்
அரங்கனோடு இனிதே கலந்திணைந்து உலகமாற்றத்துக்கு
4. மாற்றத்துக்கான மகத்துவ சூட்சும
மாதவதர்ம பலங்களாகக் கூட்டி
ஆற்றல்பட இறங்கி அருளிவர
அரங்கன் வழி தொடர்பை கூட்டும் மக்களுக்கெல்லாம்
5. அறிவிப்பேன் இந்தவித ஆற்றல்கிட்டி
மாற்றமாக வாழ்வினில் எல்லாம்
தேற்றமாக மகத்துவம் பட மகான் அரங்கன்
தருகின்ற தீட்சையின் வழி
6. வழிதனில் சக்தி பெருக்கம் கூடி
வையகத்தார் அரங்கன் வழி மொழிய ஞானிகளாக
ஐயமற அழியாமை பெற்று இந்த பேருலகில் அனைவரும்
அரங்கன் சக்திவழி உயர் ஞானிகளாகவே உருவெடுத்து

7. உருவெடுத்து அரங்கன் அவதாரம் நோக்கம் வழி
   உண்மைபட உலகை மாற்றும் உயர் சக்திகளாக இணைந்து நிற்பர்
   உலகமெங்கும் ஞானவான்களே தலைமை ஏற்று நடத்தும்
   உண்மையான ஆளுமையை தந்து அருள்புரிவர்
   ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–